

கடலூர் மாவட்டம், திட்டக்குடி சட்டமன்ற தொகுதி, மங்களூர் தெற்கு ஒன்றியம் எஸ்.நரையூர் ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்முகாமை தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் துவக்கி வைத்து பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் செங்குட்வன், சின்னசாமி, அமிர்தலிங்கம், தியாராஜன், நகர கழக செயலாளர் பரமகுரு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்: இன்று

# முதல்வர் தலைமையில் நடைபெறும் அமைதிப் பேரணியில் பங்கேற்பீர்!

## கழக நிர்வாகிகளுக்கு – பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, ஆக.7

ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் என். சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 7-வது நினைவு நாளை முன்னிட்டு கழகத் தலைவர் முதல்வர் மு க ஸ்டாலின் தலைமையில் இன்று (7.8.2025) அமைதிப் பேரணி நடைபெறுகிறது.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக் குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட நிர்வாகிகள், பகுதிவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞரணியினர், மாணவரணியினர், மகளிரணியினர், பாக முகவர்கள்(BLA-2), கழக தோழர்கள், கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி செயலாளர் 12வது மண்டல குழு தலைவர் எம் சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ.பங்கேற்பு ! சென்னை தென்மேற்கு மாவட்ட

# வர்த்தகரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள் !

## மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு வேண்டுகோள்

சென்னை ஆக:7

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மயிலை ஆர். பாலு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு;

தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர், கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பாக இன்று 7.8.2025 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில்,

ராஜா அண்ணாமலை புரம், காமராஜர் சாலை, சீனிவாச ஆவன்யூ அருகில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.தலைமையில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி, மரியாதை செலுத்தப் படுகிறது.

இதில் மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக வர்த்தகர் அணி நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உடன் பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு மரியாதை செலுத்துமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 168வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஆக.7-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 168 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு இன்று (06.08.2025), திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 71, வடிவேல் தெரு, வெள்ளையன் மார்க்கெட் அருகில், 2) வட்டம் 74 அ, கிருஷ்ணதாஸ் சாலை, வாழைமா நகர் (டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில்) சென்னை



ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, திரு.வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### புதிதாக பணி ஆணை வழங்கப்பட்ட உதவிப் பொறியாளர்கள்,

# வரைவாளர்கள் - துப்புரவு ஆய்வாளர்களுக்கான அறிமுகக் கூட்டம்!

## மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக.7-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (06.08.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் உதவிப் பொறியாளர், உதவிப் பொறியாளர் (திட்டமிடல்), இளநிலைப் பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர், வரைவாளர், பணி மேற்பார்வையாளர், நகரத் திட்டமிடல் ஆய்வாளர் / இளநிலை பொறியாளர் (திட்டமிடல்), பணி ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 2,538 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இதில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பணி ஆணை வழங்கப்பட்ட 54 உதவிப் பொறியாளர்கள், 12 வரைவாளர்கள் மற்றும் 113 துப்புரவு ஆய்வாளர்களுக்கான பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள், செயல்பாடுகள் குறித்த அறிமுகக் கூட்டம் மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தலைமையில் நேற்று (06.08.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.


மேயர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக பணி ஆணை வழங்கப்பட்ட உதவிப் பொறியாளர்கள், வரைவாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் சேவைகள் குறித்து எடுத்துக் கூறி, சிறப்பாகப் பணியாற்றிட அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், துணை மேயர் மு. மகேஷ் குமார், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ. ப. ஜெயசீலன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம் மற்றும் தலைமைப் பொறியாளர்கள், மாநகர நல அலுவலர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களால் பணி ஆணை வழங்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கான 54 உதவிப் பொறியாளர்கள், 12 வரைவாளர்கள் மற்றும் 113 துப்புரவு ஆய்வாளர்கள் என 179 பேருக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள், செயல்பாடுகள் குறித்த அறிமுகக் கூட்டம் நேற்று (06.08.2025) மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில், ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு. மகேஷ் குமார், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசிலன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் த.இராமலிங்கம் மற்றும் தலைமப் பொறியாளர்கள், உள்ளிட்ட அணுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆகஸ்ட் 7 தமிழர்கள் தலைமைப் போராளியை இழந்த நாள்!



திருவாரூரை அடுத்த திருக்குவளை என்னும் சிற்றூரில் பிறந்த அண்ணாவின் தம்பி பெரியாரின் மாணவன் தமிழர்களின் கலங்கரை விளக்கம் தமிழ் தாயின் தவப்புதல்வன் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 94 ஆண்டுகள் 65 நாள்கள் சிறந்த போராளியாக வாழ்ந்து, 7.8.2018 செவ்வாய் மாலை 6.10 மணிக்கு மறைவுற்றார்.

2018 சூலை 27 இரவு ஆழ்வார்ப்பேட்டை காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தியக் குடிஅரசுத் தலைவர், ராகுல் காந்தி முதலானோர் கலைஞர் உயிரோடு இருக்கும் போதே நேரில் வந்து அவரைப் பார்த்தனர். காவேரி மருத்துவக் குழுவினர் எவ்வளவோ போராடியும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

டாக்டர் கலைஞர் அவர்கள் 27.7.1969 இல் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 7.8.2018 முடிய 49 ஆண்டுகள் 10 நாள்கள் தி.மு.க.வின் தலைவராக மிக வெற்றி கரமாகச் செயல்பட்டார்; அக்கட்சியை மக்கள் நாயக நெறியில் கட்டிக் காத்தார்.

1969ஆம் ஆண்டு பிப்ரவரியில் தமிழக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார். அவர் பதவி வகித்த காலத்தில் தந்தை பெரியார் 1973 திசம்பர் வரை என்னென்ன கோரிக்கைகளை முன்வைத்தாரோ, அவற்றை முழு மனதோடு ஏற்று நிறைவேற்றினார்.

காட்டாக, இடஒதுக்கீடு கொள்கை. தமிழக முதலமைச்சராகத் திகழ்ந்த கு. காமராசர் எல்லா மதங்களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோருக்கு 25 விழுக்காடும், பட்டியல் வகுப்பினருக்கு 16 விழுக்காடும் ஆக 41 விழுக்காடு மட்டுமே வழங்கினார்; மு. பக்தவத்சலம் காலத்திலும் 41 விழுக்காடு இடஒதுக்கீடே தொடர்ந்தது.

இடையில், உச்சநீதிமன்றம் கர்நாடக அரசு 50 விழுக்காட்டுக்குமேல் தந்த இடஒதுக்கீடு செல்லாது என்றும், இடஒதுக்கீடு பெறும் மூன்று வகுப்பாருக்கும் சேர்த்து, 50 விழுக்காட்டுக்குக் குறைவாகவே தரப்பட வேண்டும் என்றும் 1962இல் தீர்ப்பு அளித்தது.

தந்தை பெரியார் அதைச் சுட்டிக்காட்டி, தமிழகத் தில் பிற்படுத்தப்பட்டோருக்குத் தரப்படும் இடஒதுக்கீட்டில் 8 விழுக்காடு மேலும் கூட்டி, அதைப் பிற்பட்டோருக்கு வழங்கலாமே எனக் கோரினார்.

அதை அப்படியே ஏற்றுக்கொண்ட கலைஞர், 1969 நவம்பரிலேயே, ஏ.என். சட்டநாதன் தலைமையில் மூவர் கொண்ட குழுவை அமைத்தார். அக்குழுவும் 8 விழுக்காடு சேர்த்திடப் பரிந்துரைத்தது.



**சைதை சாதிக்**
தலைமைக் கழகப் பேச்சாளர்

இடையில் தமிழகப் பட்டியல் வகுப்பினர் மக்கள் தொகையில் 16 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாக உயர்ந்துவிட்டது. எனவே, தமிழகப் பிற்படுத்தப்பட் டோருக்கு 25ளூ + 6ளூ = 31ளூ ம்; பட்டியல் வகுப்பி னருக்கு 16ளூ + 2ளூ = 18ளூ வழங்கி கலைஞர் ஆணை பிறப்பித்தார்.

அதேபோல், "அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதற்குச் சட்டம் இயற்ற வேண்டும் - இல்லாவிட்டால் போராட்டம் நடத்திச் சிறைக்குப் போவேன்" எனத் தந்தை பெரியார் 1969 அக்டோபரில் கோரிக்கை வைத்தார். அதை முன்வைத்து 1973 திசம்பர் 8, 9இல் சென்னையில் சமூக இழிவு ஒழிப்பு மாநாடு நடத்தினார். ஆயினும் 1971-லேயே அதற்கான சட்டத் தைக் கலைஞர் நிறைவேற்றினார். 1972இல் அச்சட்டம் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

தமிழ்நாட்டில் தனியாரிடம் இருந்த பேருந்துகளை நாட்டுடைமையாக்கினார்.

தந்தை பெரியார் 24.12.1973இல் மறைவுற்றார். தந்தை பெரியாரின் உடலைத் தமிழக அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யவேண்டும் என்று கலைஞர் முடிவெடுத்தார்.

தலைமைச் செயலாளரும் மற்ற உயர் அதிகாரிகளும் "பெரியார் எந்த அரசுப்பதவியிலும் இருக்கவில்லையே" என்றனர். "காந்தியார் எந்தத் பதவியிருந்தார்? அவர் உடலை அரசு மரியாதையுடன் இந்திய அரசு அடக்கம் செய்ததே" என்று திருப்பிக் கேட்டார், கலைஞர். "மேலும் என் பதவி போனாலும் போகட்டும்; கவலை இல்லை; ஏற்பாடு செய்யுங்கள்" என ஆணையிட்ட துணிவாளர் அவர்.

பெரியாரின் எழுத்து, பேச்சு எல்லாவற்றையும் 1971-1973இல் நான் தொகுத்தேன். திருச்சி சிந்தனையாளர் கழகத்தார் 1.7.1974-இல் வெளியிட்டனர். முதல் தொகுதியை முதலமைச்சர் கலைஞர் வெளியிட்டார்.

சங்கத்தின் சார்பில் மருத்துவர் ச. இராமதாசு, அவர்களுக்குத் தனி இடஒதுக்கீடு கோரிப் போராடினார். எம்.ஜி.ஆர். அதுபற்றிக் கவலைப்பட வில்லை.

டாக்டர் கலைஞர் 1989 தேர்தலில் வெற்றி பெற்றார். உடனே தமிழகப் பிற்படுத்தப்பட்டோருக் கான ஒதுக்கீடு 50 விழுக்காட்டில் 30 விழுக்காடு பிற்பட்டோருக்கும், 20 விழுக்காடு மிகப் பிற்பட்டோ ருக்கும் எனப் பிரித்து அளித்தார். இது மிகப்பிற்பட் டோருக்கு மிகப் பெரிய உதவி. அடுத்து பட்டியல் வகுப்பினருக்கு உள்ள 18 விழுக்காடு அன்னியில், தமிழகப் பழங்குடிகளுக்கு 1 விழுக்காடு தனியே வழங் கினார். கிராமப்புற மாணவர்களுக்கு 15 விழுக்காடு ஒதுக்கீடு அளித்தார்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்தாரும் செய்யத் துணியாததை - ஆணுக்கும் பெண்ணுக்கும் குடும்பச் சொத்தில் சமபங்கு அளித்துச் சட்டம் செய்தார்.

பத்தாம் வகுப்பு வரை தமிழை கட்டாய பாடமாக்கினார்.

பெண்களுக்குக் கல்வியிலும், அரசு வேலையிலும் 30 விழுக்காடு தனி ஒதுக்கீடு வழங்கினார். உள்ளாட்சிப் பதவிகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு வழங்கினார்.

முசுலிம்களுக்கும், கிறித்துவர்களுக்கும், அருந்ததியர்களுக்கும் உள் ஒதுக்கீடு வழங்கினார்.

இந்தியாவிலே முதல் முறையாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார்.

இந்தியாவில் முதல் முறையாக பட்டியல் இன மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் கொண்டு வந்தார்.

சாதி ஒழிப்புக்குத் தூண்டுதல் செய்யும் வகையில், 237 இடங்களில் "பெரியார் நினைவு சமத்துவபுரம்" அமைத்தார். அதில், 40 விழுக்காடு வீடுகளைத் தீண்டப்படாத வகுப்பினருக்கும் 25 விழுக்காடு வீடுகளைப் பிற்படுத்தப்பட்டோருக்கும் ஒதுக்கினார்.

பரிதிமாற் கலைஞரும், மறைமலை அடிகளும், பாவாணரும், தமிழ்மொழி அறிஞர்களும் விரும்பிய வண்ணம் "செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனத்தைச்" சென்னையில் அமைத்தார்.

"குறளோவியம்" தீட்டினார். திரைப்படத் துறைக்குக் கதை-வசனம் எழுதிப் புகழ் பெற்றார். 1.1.2000இல் கன்னியாகுமரியில் வள்ளுவருக்கு 133 அடி உயரச் சிலையை நாட்டினார். சென்னையில் "வள்ளுவர் கோட்டம்" அமைத்தார்.

23.3.2010இல் சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் "பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் - விரிவாக்கம் செய்யப்பட்ட 20 தொகுதிகளை" வெளியிட்டார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் திராவிட இயக்கத்துக்குக் கெட்டியான அடித்தளத்தை நாட்டிச் சென்றுள்ளார்.

தமிழக மக்களும், உலகெங்கும் வாழும் தமிழர்களும் என்றும் தலைவர் கலைஞர் அவர்களை மறக்க மாட்டார்கள். வாழ்க! வளர்க! கலைஞரின் புகழ்! மண், மொழி, மானம், காக்க தலைவர் தளபதி தலைமையில் அணிவகுப்போம் கலைஞரின் புகழ் பாடுவோம்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி (5,8,2025) அன்று வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி, முல்லை நகர் பேருந்து நிலையத்தின் முன்னேற்றப் பணி குறித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர். சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர் நேதாஜி யூ.கணேசன், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர்கள் நெடுஞ்செழியன். ராஜசேகர், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.ஷர்மிளா காந்தி, திருமலைச்சாமி, மாநகராட்சி, மின்சாரத்துறை மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்